# கட்டாயத் திருமணம்:
# அடிக்கடி கேட்கப்படும் வினாக்கள்

- **கட்டாயத் திருமணம் என்றால் என்ன?**

கட்டாயத் திருமணம் என்பது சுயவிருப்பும் பூரண சம்மதமும் இன்றி, வற்புறுத்தி, அச்சுறுத்தி, ஏமாற்றிச் செய்யப்படும் திருமணத்தைக் குறிக்கும்.

திருமணம் முடிக்க ஒருவரைக் கட்டாயப்படுத்துவது ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. கட்டாயத் திருமணம் என்பது அடிமைத்தனம் போன்ற ஒரு நடைமுறையும், மனித உரிமை மீறலும் மற்றும் ஒரு பாரதூரமான குற்றமுமாகும்.

- **ஆஸ்திரேலியாவில் கட்டாயத் திருமணங்கள் நடைபெறுகின்றனவா?**

ஆம். எந்தளவு அதிகமாக ஆஸ்திரேலியாவில் கட்டாயத் திருமணம் இடம்பெறுகின்றது என்பது பற்றிய தகவல்கள் குறைவு. ஆனால், ஆஸ்திரேலியாலில் கட்டாயத் திருமணங்கள் குறைவாகவே தெரியப்படுத்தப்படுகின்றன என்பதை அரசாங்க ஆய்வுகள் காட்டுகின்றன. ஆஸ்திரேலியாவில் நிகழும் திருமணங்களிலும் (திருமணம் முடிப்பதற்காக ஒருவர் ஆஸ்திரேலியாவுக்குக் கொண்டுவரப்படுவது உட்பட) ஆஸ்திரேலியாவிலிருந்து ஒருவர் திருமணம் முடிப்பதற்காக வெளிநாட்டுக்குக் கொண்டுசெல்லப்படும் போதும் கட்டாயத் திருமணம் நிகழலாம்.

- **ஆஸ்திரேலியாவில் கட்டாயத் திருமணம் ஒரு குற்றமா?**

ஆம். ஆஸ்திரேலியாவில் வாழும் ஒவ்வொருவரும் தாம் திருமணம் முடிப்பதா, யாரை, எப்போது என்பதைத் தெரிவுசெய்யும் சுதந்திரம் உடையவர்.

ஒருவரைத் திருமணம் முடிக்கக் கட்டாயப்படுத்துவது பொதுநலவாய *குற்றவியல் சட்டம் 1995 (Commonwealth Criminal Code Act 1995)*- இன்படி ஆஸ்திரேலியாவில் குற்றமாகும். அதற்கு நான்கு ஆண்டுகள் வரையான சிறைத் தண்டனை விதிக்கப்பட முடியும். பாதிக்கப்பட்டவர் 18 வயதுக்குக் குறைவானவராயின் சிறைத்தண்டனை ஏழு வருடங்காளாக அதிகரிக்கும். அல்லது கட்டாயத் திருமணத்துக்காக ஒரு பிள்ளை வெளிநாட்டுக்குக் கொண்டுபோகப்பட்டிருந்தால் சிறைத்தண்டனை 25 வருடங்களாகும்.

- **சமய அல்லது சலாச்சார வைபவங்களில் நடைபெறும் கட்டாயத் திருமணங்களும் ஆஸ்திரேலியாவின் கட்டாயத் திருமணக் குற்றங்களுள் அடங்குகின்றனவா?**

ஆம். ஆஸ்திரேலிய கட்டாயத் திருமணக் குற்றங்கள் பல்வேறுவகையான திருமணங்களையும் திருமணம் போன்ற உறவுகளையும் உள்ளடக்க முடியும். பதிவுசெய்யப்பட்ட உறவுகள் மற்றும் கலாச்சார, சமய வைபவங்களினால் உருவாக்கப்பட்டவையும் இதில் அடங்கும்.

- **ஆஸ்திரேலிய கட்டாயத் திருமணக் குற்றங்களுள் உள்ளடங்குவதற்கு இத்திருமணங்கள் ஆஸ்திரேலியாவில்தான் நடைபெற்றிருக்கவேண்டுமா?**

இல்லை. ஆஸ்திரேலிய கட்டாயத் திருமணக் குற்றங்கள் ஆஸ்திரேலியாவில் நடந்த திருமணங்களுக்கும் (திருமணத்துக்காக ஒருவர் ஆஸ்திரேலியாவுக்குக் கொண்டுவரப்பட்டது உட்பட), திருமணத்துக் காக ஒருவர் வெளிநாட்டுக்குக் கொண்டு செல்லப்படுவதற்கும் பொருந்தும்.

- **ஆஸ்திரேலிய கட்டாயத் திருமணக் குற்றங்கள் யாரை உள்ளடக்குகின்றன.**

கட்டாயத் திருமணம் இடம்பெறுவதில் சம்பந்தப்படும் எவரும் இக்குற்றங்களுக்கு ஆளாகக் கூடும். குடும்பத்தினர், நண்பர்கள், திருமண ஏற்பாட்டாளர்கள், திருமணத்தை நடத்தி வைப்பவர் அனைவரும் இதில் அடங்குவர்.

கட்டாயத் திருமணத்தில் சம்பந்தப்படும் பங்காளியும் (திருமணம் முடிக்க விரும்பாத ஒருவரைத் தீரமணம் செய்துகொள்பவர்) குற்றவாளியாவார். தம்பதியரில் ஒருவர் கட்டாயத் திருமணத்தால் பாதிக்கப்பட்டவர் அல்லாதவிடத்தும், மன்னிக்கத்தக்க காரணம் இல்லாதவிடத்தும் மட்டுமே இது பொருந்தும்.

- **சில குறிப்பிட்ட சமூகப்பின்னணி உடையவர்கள் மட்டும்தான் கட்டாயத் திருமணத்தக்கு ஆளாகக் கூடியவர்களா?**

இல்லை. கட்டாயத் திருமணம் ஒரு குறிப்பிட்ட கலாசார, சமய அல்லது இனத்துக்கு மட்டும் உரியதல்ல. உலகம் எங்கும் கட்டாயத் திருமணம் பற்றிய தகவல்கள் உள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் 18 வயதுக்குக் குறைந்த 14 மில்லியன் சிறுமிகள் திருமணம் செய்வதாக 'Plan International' எனும் அமைப்பு கணித்துள்ளது.

- **பெண்களும் சிறுமிகளும் மட்டும்தான் கட்டாயத் திருமணத்தால் பாதிக்கப்படுகிறார்களா?**

இல்லை. உலகெங்கும் பாதிக்கப் பட்டவர்களில் பெரும்பான்மையினர் இளம் பெண்களும் சிறுமிகளும்தான் என்ற போதிலும் ஆண்களும் சிறுவர்களும்கூட கட்டாயத் திருமணத்தால் பாதிக்கப்பட்டலாம். ஒருவரது பாலினம் அல்லது பாலியல் நாட்டம் எதுவாக இருந்தாலும் அவர் கட்டாயத் திருமணத்தால் பாதிக்கப்படலாம்.

- **கட்டாயத் திருமணங்கள் பேசிமுடிக்கப்பட்ட திருமணத்திலிருந்து வேறுபட்டதா?**

**ஆம்.** கட்டாயத் திருமணமும் பேசிமுடிக்கப்பட்ட திருமணமும் முற்றிலும் வேறுபட்டவை.

பேசிமுடிக்கப்படும் திருமணத்தில் தம்பதியர் ஒரு மூன்றாம் தரப்பினரால் அல்லது குடும்பத்தினரால் அறிமுகப்படுத்தப் படுகின்றனர். அதேவேளை இருதரப்பினரின் சம்மதமும் தேவை. இரு தரப்பினரும் திருமணத்திற்குச் சம்மதிக்கலாம் அல்லது மறுக்கலாம்.

பேசிமுடிக்கப்படும் திருமணங்கள் ஆஸ்திரேலியாவில் சட்டபூர்வமானவை.

- **ஒருவர் கட்டாயத் திருமணத்திற்கு ஆளாகியிருக்கிறார் அல்லது ஆளாகக்கூடிய ஆபத்தில் இருக்கிறார் என்பதற்குரிய அறிகுறிகள் எவை?**

உங்களுக்குத் தெரிந்த ஒருவர் திருமணத்திற்கு ஆளாகியிருக்கிறார் அல்லது அதற்கு ஆளாகும் ஆபத்தில் இருந்தால், தனது நிலைபற்றி உங்களுக்குச் சொல்வது அவருக்குச் சிரமமாக இருக்கலாம்.

எனினும், பின்வரும் அறிகுறிகளுள் சில அவர் கட்டாயத் திருமணத்திற்கு ஆளாகி இருக்கிறாரா அல்லது அதற்கு ஆளாகும் ஆபத்தில் இருக்கிறாரா என்பதைக் காட்டலாம்.

- ஒருவர் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டிருப்பதான திடீர் அறிவிப்பு
- அவருடைய மூத்த சகோதரர்கள் அல்லது சகோதரிகள் பாடசாலை செல்வதை நிறுத்துதல் அல்லது அவர்கள் குறித்த காலத்திற்கு முன்பே திருமணம் செய்துவைக்கப்பட்டிருத்தல்
- வழமைக்கு மாறாக அல்லது அவசியம் இன்றி அவரின் குடும்பத்தினர் அவரைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல் (உ-ம். அவரைத் தனியே செல்ல அனுமதிக்காமை, அல்லது குடும்பத்தினர் யாராவது எப்பொழுதும் அவருடன் இருத்தல்)
- மன அழுத்தம், தனக்குத் தானே தீங்கிழைத்துக்கொள்ளல், சமூகத்திலிருந்து விலகியிருத்தல், போதைப்பொருள் பாவனைக்கு ஆளாகியிருத்தல் போன்ற அடையாளங்கள் அவரிடம் வெளிப்படுதல்
- எதிர்வரக்கூடிய வெளிநாட்டுக் குடும்ப விடுமுறை ஒன்று பற்றி அவரிடம் அச்சமும் பதற்றமும் காணப்படுதல்
- பாடசாலை, பல்கலைக்கழகம், அல்லது வேலைத்தளம் ஆகியவற்றுக்கு அவர் நீண்டநாட்களாக வராதிருத்தல்
- பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வேலைத்தலத்துக்கு அவர் அடிக்கடி வராதிருத்தல் அல்லது அதிலிருந்து திடீரென விலகுதல்
- அவரது வருமானம் அவர் கட்டுப்பாட்டில் இல்லாமலிருத்தல்
- அவர் தனது எதிர்காலம் பற்றி முக்கியமான முடிவுகள் எடுக்கமுடியாதிருத்தல் தமது பெற்றோருடன் ஆலோசிக்காது அல்லது அவர்களின் சம்மதம் இல்லாது தீர்மானம் மேற்கொள்ள முடியாதிருப்பதும் இதில் அடங்கும், மற்றும் / அல்லது
- குடும்பச் சச்சரவுகள் அல்லது சண்டைகள், வீட்டு வன்முறை, துஷ்பிரயோகம், அல்லது வீட்டைவிட்டு ஓடுதல் போன்றவற்றுக்கான சான்றுகள் இருத்தல்.

இந்த விபரங்கள் எல்லாம் விலாவரியானவை அல்ல ஆனால் ஒருவர் கட்டாயத் திருமணத்திற்கு ஆளாகி இருக்கிறார் அல்லது ஆளாகும் ஆபத்தில் இருக்கிறார் என்பதை இவை காட்டலாம்.

- **ஒருவர் கட்டாயத் திருமணத்திற்கு ஆளாகி இருக்கிறார் அல்லது அதற்கு ஆளாகும் ஆபத்திலிருக்கிறார் என்று நான் நினைத்தால் நான் என்ன செய்யவேண்டும்?**

கட்டாயத் திருமணத்தின் அறிகுறிகளை அடையாளம் காண்பது சிரமமாக இருக்க முடியும். இது தொடர்பாக எவ்வாறு செயற்படுவது என்பது பற்றி உங்களுக்கு நிச்சயம் இல்லாதிருந்தால் முடிந்த அளவு விரைவில் நீங்கள் உதவியும் ஆலோசனையும் பெறவேண்டும்.

கட்டாயத் திருமணத்திற்கு ஆளாகியுள்ள அல்லது ஆளாகும் ஆபத்திலுள்ள நபரின் நலன்களுக்காக, அவருடைய பாதுகாப்பையும் உங்களுடைய பாதுகாப்பையும் கவனத்தில்கொண்டு நீங்கள் எப்போதும் செயற்படுவது முக்கியமாகும்.

உடனடியான ஆபத்து இருக்குமாயின் மூன்று சைபர்கள் (000) தேசிய அவசரகாலத் தொலைபேசி எண்ணை அழையுங்கள்.

அவ்வாறு இல்லையெனில், 'ஆஸ்திரேலிய பெடரல் காவல்துறை'யினர் (Australian Federal Police - AFP) கட்டாயத் திருமணத்திற்கு ஆளாகக் கூடிய ஆபத்தில் இருப்பவருக்கு ஆரம்ப உதவிகளைச் செய்யமுடியும். அந்த நபர் வெளிநாட்டிற்குக் கொண்டுசெல்லப்படாதிருப்பதை உறுதிப்படுத்துவதும் இதில் அடங்கும்.

பாதிக்கப்பட்டவருக்கு பாதுகாப்பான தங்குமிடம், நிதி உதவி, சட்ட ஆலோசனை மற்றும் உளவள ஆலோசனை உட்பட தேவையான உதவிகளுக்கான பரிந்துரையை AFP மேற்கொள்ள இயலும். விசாரணையில் அல்லது வழக்குத் தொடர்வதில் அவர்கள் உதவ விரும்பாத போதிலும் கூட பாதிக்கப்பட்டவருக்கு ஆரம்ப உதவிகள் கிடைக்கும்.

நீங்கள் விரும்பினால் AFP உடன் தொடர்புகொள்வது அனாமதேயமாகவும் இருக்கலாம். நீங்கள் 131 AFP (131 237) என்ற தொலைபேசி இலக்கத்தில் அழைக்கலாம். அல்லது பின்வரும் வலைத்தளத்தில் ஒன்லைன் படிவத்தை நிரப்பலாம். <www.afp.gov.au/policing/human-trafficking.aspx>

பின்வரும் விசேட சமூக நிறுவனங்களும் உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கக் கூடும்.

- **Anti-Slavery Australia: (அடிமைத்துவ ஒழிப்பு அவுஸ்திரேலியா)** தொலைபேசி: 02 9514 9662; மின்னஞ்சல்: antislavery@uts.edu.au; வலைத்தளம்: <www.antislavery.org.au/>
- **Australian Muslim Women's Centre for Human Rights (மனித உரிமைகளுக்கான அவுஸ்திரேலிய முஸ்லிம் மகளிர் நிலையம்)** தொலைபேசி: 03 9481 3000; <http://ausmuslimwomenscentre.org.au/>
- **Salvation Army: (இரட்சணிய சேனை)** தொலைபேசி: 02 9211 5794 மின்னஞ்சல்: endslavery@aue.salvationarmy.org.au வலைத்தளம்: <http://endslavery.salvos.org.au>
- **The National Sexual Assault, Domestic & Family Violence Counselling Service (தேசிய பாலியல் தாக்குதல், வீட்டு மற்றும் குடும்ப வன்முறை உளவள ஆலோசனை சேவை)** : தொலைபேசி: 1800 RESPECT (1800 737 732) வலைத்தளத்தின் ஊடாகவும் உளவள ஆலோசனை கிடைக்கும். வலைத்தளம்: <www.1800respect.org.au/>

  பாதிக்கப்பட்ட நபர் 'Family Law Courts National Enquiry Centre' (குடும்பச் சட்ட நீதிமன்ற விசாரணை மையத்திலும்) ஆலோசனை பெற விரும்பலாம். பின்வரும் இலக்கத்தில் அதனுடன் தொடர்புகொள்ளலாம் 1300 352 000. அல்லது அண்மையிலுள்ள 'Legal Aid' (சட்ட உதவி) அலுவலகத்திலுள்ள குடும்ப வக்கீல் ஒருவரிடம் ஆலோசனை பெறலாம்.

  மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவைகளுக்கு (TIS) 131 450 என்ற இலக்கத்தில் தொடர்புகொள்ளலாம்.

- **கட்டாயத் திருமணத்துக்கு ஆளாகியிருப்பவர்கள் அல்லது அதற்கு ஆளாகும் ஆபத்தில் இருப்பவர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளக்கூடிய வழிகள் ஏதும் உண்டா?**

ஆம். அவர்கள் கட்டாயத் திருமணத்துக்கு ஆளாகியிருந்தால் அல்லது தாம் அதற்கு ஆளாகிவிடக்கூடும் என்ற ஆபத்திலிருந்தால், அவர்களைப் பாதகாப்பதற்கான கட்டாயத் திருமணப் பாதுகாப்புத் திட்டம் ஒன்று உண்டு.

இத்திட்டத்தைப் பூரணப்படுத்துவதன் மூலம், பாதுகாப்பற்ற சூழ்நிலைகளில் தாம் எவ்வாறு எதிர்வினையாற்றுவது என்பது பற்றிச் சிந்திக்கவும், பாதுகாப்பாகத் தொடர்புகொள்வதற்குரிய நடைமுறை உத்திகளை இனங்காணவும், வீட்டில் பாதுகாப்பாக இருக்கவும், அல்லது வீட்டைவிட்டுப் பாதுகாப்பாக வெளியேறத் தயாராகவும், தங்களைத் திருமணம் முடிக்க வெளிநாட்டுக்குக் கொண்டுசெல்லாதிருப்பதை உறுதிப்படுத்தவும் அவர்களுக்கு உதவும்.

கட்டாயத் திருமணப் பாதுகாப்புத் திட்டம் பின்வரும் வலைத்தளத்தில் கிடைக்கும். <www.ag.gov.au/forcedmarriage>

- **கட்டாயத் திருமணத்திற்காகச் சிறுவர் சிறுமியர்கள் வெளிநாடுகளுக்குக் கொண்டுசெல்லப்படாதிருக்க ஆஸ்திரேலியா என்ன செய்திருக்கிறது?**

கட்டாயத் திருமணம் உட்பட சுரண்டல் நோக்கங்களுக்காகச் சிறுவர் சிறுமியர்கள் வெளிநாடுகளுக்குக் கொண்டுசெல்லப்படுவதைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள் உள்ளன.

'Australian Federal Circuit Court' பின்வரும் காரியங்களுக்காக உத்தரவுகளை இடமுடியும்:

- ஒரு பிள்ளைக்குக் கடவுச்சீட்டு வழங்குவதைத் தடுக்க
- ஒரு பிள்ளையை நீதிமன்றத்திற்குக் கொண்டுவர அல்லது கூட்டிச்செல்பவரின் கடவுச்சீட்டை நிதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்க, அத்துடன்
- ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு பிள்ளையை எடுத்துச் செல்வதைத் தடுக்கவும் அப்பிள்ளையின் பெயரை விமான நிலையக் கண்காணிப்புப் பட்டியலில் (Airport Watch List) சேர்க்கவும் செய்யலாம்.

- **18 வயதுக்குக் குறைந்த ஒருவர் ஆஸ்திரேலியாவில் சட்டரீதியாகத் திருமணம் செய்யமுடியுமா?**

ஆம். சில வரையறுக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் செய்யலாம்.

*1961*ஆண்டுப் பொதுநலவாயத் *திருமணச் சட்டமானது, (Commonwealth Marriage Act 1961)* 16-க்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட ஒருவர் (பொதுவாகப் பெற்றோரின்) சம்மதத்துடனும், திருமணத்தை அங்கிகரித்து ஒரு நீதிபதியினால் பிறப்பிக்கப்படும் ஆஸ்திரேலிய நீதிமன்ற உத்தரவுடனும் அல்லது நீதிமன்ற நடுவரின் அனுமதியுடன் திருமணம் செய்வதை அனுமதிக்கின்றது. இருவரும் 18 வயதுக்குக் குறைந்தவர்களாயின் அவர்கள் திருமணம் செய்யமுடியாது. 16 வயதுக்குக் குறைந்த யாரும் எச்சூழ்நிலையிலும் ஆஸ்திரேலியாவில் திருமணம் செய்யமுடியாது.

- **திருமணம் கட்டாயத்தின்பேரில் நிகழ்ந்ததாயின் திருமணச் சட்டத்தின் கீழ் அது ஏற்றுக்கொள்ளப்படுமா?**

*1961*ஆண்டுப் பொதுநலவாயத் *திருமணச் சட்டப்படி (Commonwealth Marriage Act 1961)* திருமணத்தில் சம்பந்தப்பட்ட ஒரு பகுதியினரின் சம்மதம் உண்மை இல்லை என்றால் அல்லது ஒருவர் திருமணம் செய்யும் வயதினர் அல்ல என்றால் அத்திருமணம் செல்லுபடியாகாது.